

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் முகாம் அலுவலகத்தில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. சந்தித்து மலேசியாவில் நடைபெறவிருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா மற்றும் தமிழர் 15 –ம் தொழில் வணிகச் சங்கம் மாநாட்டில் பங்கேற்க செல்வதையொட்டி, வாழ்த்துப் பெற்றார். உடன் கழகப் பொதுச் செயலாளர் – நீர்வளத் துறை அமைச்சர் துரைமுருகன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், பொதுப்பணி மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆகியோர் உள்ளனர்.

### மலேசியாவில் ‘தமிழர் 15 ஆம் தொழில் வணிகச் சங்கமம்’ மற்றும்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

## கழகத் துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. பங்கேற்கிறார்!

*சென்னை, ஆக.15 -*

மலேசியாவில் நடைபெறும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் மற்றும் பார் போற்றும் தமிழர் 15 -ஆம் தொழில் வணிகச் சங்கமம் மாநாட்டில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ. இராசா எம்.பி. பங்கேற்று சிறப்புரை யாற்றுகிறார்.

இவ்விழாவில் பங்கேற்க நேற்று (14.8.2025) காலை அவர் மலேசியா புறப்பட்டுச் சென்றார்.

வெளிநாட்டு வாழ் தமிழ் இந்தியர் சங்கம் மற்றும் மலேசியா தமிழ்ச் சங்கங்கள் இணைந்து நடத்தும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின பிறந்த நாள் விழா மலேசியாவில் 17.8.2025 அன்று மாலை 6 மணிக்கு செய்யத் பிஸ்ட்ரோ ஹால் மாங் வாங்கியில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சிக்கு கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி. தலைமை வகித்து சிறப்புரையாற்றுகிறார்.

கழக அயலக அணிச் செயலாளரும் நாடாளு மன்ற முன்னாள் உறுப்பினருமான எம்.எம்.ஏ. அப்துல்லா முன்னிலை வகிக்கிறார்.

மலேசியா நாடாளு மன்ற உறுப்பினர் டத்தோ ஸ்ரீஎம். சரவணன் சிறப்பு அழைப்பாளராகப் பங்கேற்கிறார்.

இதனைத் தொடர்ந்து “பார் போற்றும் தமிழர் 15 ம் தொழில் வணிகச் சங்கமம் மலேசிய வா தமிழா” நிகழ்ச்சி பினாங்கு நகரில் ஆகஸ்ட் 15, 16, 17 தேதிகளில் நடைபெறகிறது.

இந்நிகழ்ச்சிகளிலும் ஆ. இராசா எம்.பி. பங்கேற்று சிறப்புரை யாற்றுகிறார்.

தமிழர் இந்தியர் சங்கம்

மலேசிய ஒன்றிய அரசு பினாங்கு மாநில அரசுகளின் ஆதரவு, அமெரிக்கா முதல் இந்தோனேசியா வரை பல்வேறு நாடுகளிலிருந்து வரும் வெற்றித் தமிழர்கள் மற்றும் மாபெரும் ஆளுமைகளின் வருகை, தமிழகத்திலிருந்து மட்டுமே 250க்கும் மேலான தொழில் வணிக உறவுகளின் பங்கேற்பு என பினாங்கு நகரில் ஆகஸ்ட் 15, 16, 17 நாட்களில் The Rise எழுமின் 15வது உலக மாநாடு நடைபெறுகிறது.

கடந்த ஆறு மாத காலம் டத்தோ சரவணன் தலைமையில் இரவு பகலாய் உழைத்த The Rise மலேசிய அணியினரை எல்லோரும் ஒன்றுகூடி வாழ்த்துகிறோம். நாம் ஒரு அழகிய தமிழ்க் குடும்பம் என உணரும் வகையில் பினாங்கு மாநாட்டின் பன்முகச் சிறப்புகளும் இச் சந்திப்பின் போது எடுத்துரைக்கப்படும் என்று கூறியுள்ளார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து உலகின் 6 முன்னணி நாடுகளின் துணை தூதர்களுடன் நேற்று முன்தினம் (13.8.2025) கலந்துரையாடினார். இந்நிகழ்வில் சென்னைக்கான அமெரிக்கா துணைத் தூதர் கிறிஸ்டோபர் டபிள்யூ. ஹாட்ஜஸ், பிரிட்டன் துணைத் தூதர் திருமதி. ஹலிமா ஹாலந்த், ஆஸ்திரேலியா துணைத் தூதர் திருமதி. சிலாய் ஜாக்கி, ஜெர்மன் துணைத் தூதர் மைக்கேல் ஹாஸ்பர், பிரான்ஸ் துணைத் தூதர் கிறிஸ்டோஃப் பிரமெளல்லே, சிங்கப்பூர் துணைத் தூதர் எட்கர் பாங், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, , சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக

# உலகின் 6 முன்னணி நாடுகளின் துணைத் தூதர்களுடன் கலந்துரையாடல்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!

**சென்னை, ஆக. 15-**

**தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து உலகின் 6 முன்னணி நாடுகளின் துணை தூதர்களுடன் கலந்துரையாடினார்.**

தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (13.8.2025) அமெரிக்கா, பிரிட்டன், ஆஸ்திரேலியா, ஜெர்மனி, பிரான்ஸ், சிங்கப்பூர் ஆகிய உலகின் 6 முன்னணி நாடுகளைச் சேர்ந்த துணைத் தூதர்கள் சந்தித்து, தமிழ்நாட்டில் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது கலந்துரையாடினார்கள்.

இந்த கலந்துரையாடலின்போது, துணை முதலமைச்சர் அவர்கள் வெளிநாடு களின் துணைத் தூதர்களிடம், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டை இந்தியாவின் முதன்மை மாநிலமாக உருவாக்கி வருகின்றார். தமிழ்நாட்டின் கல்வி, தொழில் நுட்ப அறிவுத் திறன் பெற்ற மனிதவளம், கணினி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் சிறந்த பொறியியல் வல்லுநர்கள், உலகின் எந்த பகுதியிலும் இருந்தும் உடனுக்குடன் வந்து செல்ல விமான போக்குவரத்து வசதிகள், உற்பத்தி செய்த பொருட்களை ஏற்றுமதி செய்ய சாலைகள், துறைமுகம் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து பல்வேறு வெளிநாடுகளுக்கு சென்று முதலீட்டாளர்களிடம் தெரிவித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொழில் முதலீடு களை ஈர்த்து வருகின்றார்கள் என்று தெரிவித்தார்.

இந்த நிகழ்வில், துணை முதலமைச்சர் அவர்கள் விளையாட்டு, வணிகம், வர்த்தகம், திறன் மேம்பாடு மற்றும் கல்வி ஆகிய துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்தும், நமது தேசத்துடனும் தமிழ்நாட்டுடனும் உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் வெளிநாடுகளின் துணைத் தூதர்களிடம் கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் சென்னைக்கான அமெரிக்கா துணைத் தூதர் கிறிஸ்டோபர் டபிள்யூ. ஹாட்ஜஸ், பிரிட்டன் துணைத் தூதர் திருமதி. ஹலிமா ஹாலந்த், ஆஸ்திரேலியா துணைத் தூதர் திருமதி. சிலாய் ஜாக்கி, ஜெர்மன் துணைத் தூதர் மைக்கேல் ஹாஸ்பர், பிரான்ஸ் துணைத் தூதர் கிறிஸ்டோஃப் பிரமெளல்லே, சிங்கப்பூர் துணைத் தூதர் எட்கர் பாங், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி. ராஜா, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தமிழ்நாடு தொழில் வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் மருத்துவர் தாரேஸ் அகமது, உள்பட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### 2 ஆம் கட்டமாக 17 தொகுதிகளுடன்

# அண்ணல் அம்பேத்கர் ஆக்கங்கள் - தமிழ் மொழி பெயர்ப்பு!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் வெளியிட்டார்

*தூத்துக்குடி, ஆக. 15 -*

அண்ணல் அம்பேத்கரின் ஆக்கங்கள் தமிழ் மொழிபெயர்ப்பு இரண்டாம் கட்டமாக 17 தொகுதிகளை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் நேற்று முன்தினம் (13.08.2025) வெளியிட்டார்.

இந்திய அரசமைப்புச் சட்டத்தின் தந்தையும் முற்போக்கு சமத்துவ இந்தியாவின் சிற்பியுமான அண்ணல் அம்பேத்கர் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கி சமத்துவ சமுதாயம் உருவாக்க பாடுபட்டவர். நம்மை முன்னேறவிடாது இறுகப் பிடித்து இன்னல்கள் பல விளைவிக்கும் சாதி எனுங்கோட்பாட்டை நீக்கிட வேண்டும் என்று சமத்துவ முரசு கொட்டியவர். சாதி, சமயங்கள், மதபேதங்கள், உயர்வு தாழ்வு இவையெல்லாம் அகற்றவும் அனைவரும் சமம் என்ற சூழ்நிலையை உருவாக்கவும் அயராது உழைத்தவர்.

அண்ணல் அம்பேத்கரின் அனைத்து படைப்புகளும் இன்றைய தமிழ் இளைஞர்கள் எளிமையாக வாசிக்கும் வகையில் புலவர் செந்தலை ந. கவுதமன், பேராசிரியர் வீ. அரசு, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மேனாள் பேராசிரியர் முனைவர் மு. வளர்மதி, கல்லூரிக் கல்வி இயக்ககத்தின் மேனாள் துணை இயக்குநர் திரு. அ. மதிவாணன் ஆகியோரின் நெறியாளுகையில் அனைவரும் புரிந்துகொள்ளும் வகையில் பிறமொழிக் கலப்பினை அகற்றி மொழிபெயர்க்கப்பட்டு, தமிழ் வளர்ச்சித் துறை நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்துடன் இணைந்து மக்கள் பதிப்பாக அணியம் செய்யப்பட்ட முதல் 10 தொகுதிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் 13.01.2025 அன்று வெளியிடப்பட்டன.

முதற்கட்டமாக வெளியிடப்பட்டு அச்சிடப்பட்ட 10 தொகுதிகளின் விற்பனை தொடங்கிய இரண்டு திங்களுக்குள் 2000 படிகள் விற்றுத் தீர்ந்தன. இதன் மூலம் பெறப்பட்ட ரூ.14,00,000/ (ரூபாய் பதினான்கு இலட்சம் மட்டும்) அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

இதன் தொடர்ச்சியாக தற்போது இரண்டாம் கட்டமாக மொழிபெயர்க்கப்பட்டு அணியம் செய்யப்பட்டுள்ள தீண்டாமை 2 தொகுதிகள்; காங்கிரசும் காந்தியும் தீண்டப்படா தோருக்குச் செய்தது என்ன - 4 தொகுதிகள்; இந்து மதம், மார்க்சியம், மத மாற்றம் - 4 தொகுதிகள்; புத்தர் - அவரது தம்மம் - 3 தொகுதிகள்; பாகிஸ்தான் அல்லது இந்தியப் பிரிவினை - 4 தொகுதிகள் என மொத்தம் 17 தொகுதிகளை மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் நேற்று (13.08. 2025 - புதன்கிழமை) தலைமைச் செயலகத்தில், வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன். தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள், நெறியாளுகை உறுப்பினர்கள் பேராசிரியர் வீ.அரசு, அ.மதிவாணன் மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தைச் சேர்ந்த சோ.சண்முகநாதன், ஆ.சிவக்குமார், மா.சிவக்குமார் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்

# உலகளவில் வாழும் தமிழர்களுக்கான நம்பிக்கை ஒளியாய்த் திகழ்கிறார்!

## ஆஸ்திரேலிய பெரியார் அம்பேத்கார் சிந்தனை வட்டம் பாராட்டு!

*திருப்பூர். ஆக.15-*

தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் உலகளவில் வாழ் தமிழர்களுக்கான நம்பிக்கையின் ஒளியாய் திகழ்கிறார் என்று ஆஸ்திரேலிய பெரியார் அம்பேத்கார் சிந்தனை வட்டம் பாராட்டு தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலிய மெல்போர்ணில் பெரியார் அம்பேத்கார் சிந்தனை வட்டம் (PATCA), தமிழ்நாடு அரசின் அயலகத் தமிழர் நல வாரியத்துடன் (NRTWB) இணைந்து, 2025 ஆகஸ்ட் 10, ஞாயிற்றுக்கிழமையன்று மெல்போர்னில் ஒரு உற்சாகமளிக்கும் நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் NRTWBஇன் தலைவர், கழக சுற்றுச்சூழல் அணி செயலாளர் கார்த்திகேய சிவசேனாபதி வெளிநாடு வாழ் தமிழர்களுக்கு வாரியத்தின் பல்வேறு ஆதரவு முயற்சிகளை விரிவாக விளக்கி உரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியின் முக்கிய அம்சமாக, மெல்போர்ண் தமிழ் சமூகத்தினர் பல்வேறு புலம்பெயர் பிரச்சினைகள் குறித்து கேள்விகளை எழுப்பினர், அதற்கு தெளிவான, சிந்தனையைத் தூண்டும் பதில்களை கார்த்திகேய சிவசேனாபதி வழங்கினார்.

PATCAஇன் தலைவர் டாக்டர். அண்ணாமலை மகிழ்நன், பெரியார் மற்றும் டாக்டர் பி.ஆர். அம்பேத்கார் ஆகியோரின் சமூக நீதி கொள்கைகளுடன் அதன் இன் பணியை வலியுறுத்தி, ஊக்கமளிக்கும் தொடக்க உரையாற்றினார்.

பங்கேற்ற தமிழ் புலம் பெயர் சமூகம், அயலகத் தமிழர்களின் நலனுக்காக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அர்ப்பணிப்பை ஆழ்ந்து பாராட்டியது. NRTWBஐ அறிவித்தல் மற்றும் 2023 அயலகத் தமிழர் தினம் போன்ற நிகழ்ச்சிகளில் அவரது பங்கேற்பு, புலம்பெயர் சமூகத்துக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையேயான பிணைப்பை வலுப்படுத்தியுள்ளது, உள்ளடக்கம், கலாச்சார பாதுகாப்பு மற்றும் சமூக நீதியை மேம்படுத்துகிறது. பங்கேற்பாளர்கள் அவரது தலைமையை உலகளவில் வாழ் தமிழர்களுக்கான நம்பிக்கையின் ஒளியாகப் புகழ்ந்தனர்.

நிகழ்ச்சியை இன் நிர்வாகக் குழு உறுப்பினர்கள் அரங்க. மூர்த்தி, சுரேஷ், ராதிகா, பொருளாளர் திருமலை நம்பி, உறுப்பினர்கள் வசந்த குமார், இளையமதி, மற்றும் சரவணன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்தனர். 150க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்கள், சமூகத் தலைவர்கள், அறிஞர்கள் மற்றும் தமிழ் புலம்பெயர் உறுப்பினர்கள், ஆழமான விவாதங்கள் மற்றும் கலாச்சார பரிமாற்றங்களை அனுபவித்தனர். மற்றும் இத்தகைய கூட்டு முயற்சிகள் மூலம் தமிழ் சமூகத்தை வலுப்படுத்துவதில் உறுதியுடன் உள்ளன. அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் இந்நிகழ்ச்சியை வெற்றிகரமாக்கியதற்கு மனமார்ந்த நன்றி நன்றியினை கார்த்திகேய சிவசேனாபதி தெரிவித்தார்.

### நவ. 1, 2 —ல் ஆசிரியர் தகுதித் தேர்வு அறிவிப்பு

# தேர்வுத் தேதியை மாற்றி அமைத்திடுக!

## முதல்வருக்கு — இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ. கோரிக்கை!

*சென்னை, ஆக.15 -*

“ஆசிரியர் தகுதித் தேர்வு நவ. 1, 2-ல் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத் தேதிகளில் கல்லறைத் திருநாள் கடைபிடிக்கப்படுவதால் தேர்வுத் தேதியை மாற்றி அறிவிக்குமாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கிறிஸ்தவ நல்லெண்ண இயக்கத் தலைவர் த. இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ. கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது



கல்லறைத் திருநாள் (All Souls Day) என்பது உலகமெங்கும் வாழும் கிறிஸ்தவர்களால் அனுசரிக்கப்பட்டு வரும் ஒரு புனித நாளாகும். ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் மாதம் 2ம் தேதி இறந்தவர்களின் ஆன்மாவுக்காக பிரார்த்தனை செய்யப்பட்டு வரும் நாள் தான் கல்லறைத் திருநாளாகும். அந்நாளில் தங்கள் குடும்பங்களில் இறந்தவர்கள் அல்லது தங்களின் அன்புக்குரியவர்களின் கல்லறைகள் எங்கு இருக்கிறதோ அந்த ஊர்களுக்கு சென்று கல்லறையினை சுத்தம் செய்து மலர்கள் மற்றும் மெழுகுவர்த்திகள் வைத்து இறந்தவர்களின் ஆன்மா சாந்தி அடைய ஜெபிக்கும் நாளாகும்.

கிறிஸ்தவர்களின் கல்லறைத் திருநாளாக கடைப்பிடித்து வரும் நவம்பர் 1, 2ம் தேதிகளில் ஆசிரியர்களாக பணியாற்றுவதற்கான தகுதி தீர்மானிக்க நடத்தப்படும் தகுதி தேர்வான TNTET Exam 2025 என்கின்ற ஆசிரியர்கள் தேர்வு நடைபெறும் என்ற அறிவிப்பு தமிழக அரசால் வெளியிடப்பட்டுள்ளது. சிறுபான்மையின மக்களைத் தொடர்ந்து பாதுகாத்து வரும் தாங்கள், கல்லறைத் திருநாளை முன்னிட்டு இந்த தேர்வு தேதியை மாற்றி அமைத்து தரவேண்டும் என்று தமிழகத்தில் வாழும் கிறிஸ்துவர்களின் சார்பாக தங்களிடம் கோரிக்கை வைக்கின்றேன்.

எங்களது கோரிக்கையை எப்பொழுதும் கூர்ந்து கவனித்து செயல்படுத்தி வரும் தாங்கள் TNTET Exam 2025 ஆசிரியர் தேர்வு தேதியினை வேறு ஒரு நாட்களில் மாற்றி செயல்படுத்தி தருவீர்கள் என்று நம்பிக்கையோடு வேண்டுகோள் வைக்கின்றேன்.

இவ்வாறு த.இனிகோ இருதயராஜ் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.



கோவை மாநகர் மாவட்டம், தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இராமநாதபுரம் பகுதி கழக அலுவலகத்தில் தமிழ் மண், மொழி, மானம் காத்திட “ஓரணியில் தமிழ்நாடு” கழக உறுப்பினர் சேர்க்கையில் தீவிரமாக செயல்படுவது குறித்த ஆலோசனைக் கூட்டம் கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில் நடைபெற்றது. இதில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், பொதுக்குழு உறுப்பினர்கள் வெ.ந.உதயகுமார், மு.மா.ச.முருகன், பகுதி பொறுப்பாளர் ப.பசுபதி, வட்டக் கழக செயலாளர் ந.சண்முகசுந்தரம், மாநகராட்சி பணிகள் குழு தலைவர் சாந்தி முருகன் உள்பட கழக நிர்வாகிகள், BLA2, BDA பூத் கமிட்டி உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.



தலைமைச் செயலகத்தில் நேற்று முன்தினம் (13.08.2025) தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தமிழ் வளர்ச்சித் துறை வாயிலாக அண்ணல் அம்பேத்கரின் தமிழாக்கங்கள் 17 தொகுதிகளை வெளியிட்டார். இந்நிகழ்வில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் முனைவர் ந.அருள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், நெறியாளுகை உறுப்பினர்கள் பேராசிரியர் வீ. அரசு, அ. மதிவாணன், என் சி பி எச் நிறுவனத்தார் உடனிருந்தனர்.